பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
04 09 2025 THURSDAY 7 15 AM
ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில், முக்கிய கனிமங்களின் மறுசுழற்சியை மேம்படுத்துவதற்காக ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான ஊக்குவிப்பு திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. மக்களின் எளிதான வாழ்க்கையை கருத்தில் கொண்டு, சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. வேலைவாய்ப்பு குறித்து போலியாக வெளியிடப்படும் இணையதளங்கள் தொடர்பாக மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

4. காஸா நகரை கைப்பற்றுவதற்காக 40 ஆயிரம் ராணுவ வீரர்களை இஸ்ரேல் தயார் நிலையில் வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

5. ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியின் சூப்பர்-4 சுற்றில் இந்தியா – கொரியா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 2-2 என்ற கோல்கணக்கில் டிராவில் முடிவடைந்தது.

>>>>>>><<<<<<<

நாட்டில், முக்கிய கனிமங்களின் மறுசுழற்சியை மேம்படுத்துவதற்காக ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான ஊக்குவிப்பு திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டம், தேசிய முக்கிய கனிமங்கள் இயக்கத்தின் ஒரு பகுதியாகும்.

இந்த ஊக்குவிப்பு திட்டம், நடப்பு நிதியாண்டு முதல் 6 நிதியாண்டுகளுக்கு அமல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய அறிவிப்பு மூலம், 8 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு கிடைக்கும் என்றும், 70 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

சரக்கு மற்றும் சேவை வரி 5 மற்றும் 18 என்ற இரண்டு அடுக்கு வரி விகிதங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்மூலம், பல்வேறு பொருட்கள் மீதான சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்திற்குப் பின், செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், சாதாரண மற்றும் நடுத்தர மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் மீதான வரி, முன்னதாக விதிக்கப்பட்ட 18 மற்றும் 12 சதவீதத்திலிருந்து தற்போது 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சப்பாத்தி உள்ளிட்ட அனைத்து வகை இந்திய ரொட்டிகள், கொண்டைக்கடலை, பன்னீர் உள்ளிட்டவற்றிற்கு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

மருத்துவ காப்பீட்டுத் திட்டங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

குளிர்சாதன இயந்திரங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், சிறியவகை கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் மீதான வரி 28 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அனைத்து வேளாண் உபகரணங்கள் மீதான வரி, 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் விவசாயிகள் பயனடைவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

சாக்லெட், காபி, வெண்ணெய், நெய் உள்ளிட்ட பொருட்கள் மீதான சரக்கு மற்றும் சேவை வரி 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

வாகன உதிரி பாகங்கள், மூன்று சக்கர வாகனங்கள் ஆகியவற்றின் மீதான வரி, 28 சதவீதத்திற்கு பதிலாக இனி 18 சதவீதமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த வரி விகிதங்கள் இம்மாதம் 22ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

>>>>>>><<<<<<<

சரக்கு மற்றும் சேவை வரியில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதற்கு தலைவர்கள் பலர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்கள் குறைப்பு மூலம், சாதாரண மக்கள், விவசாயிகள், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர், நடுத்தர வகுப்பினர், பெண்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோர் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் எளிதான வாழ்க்கையை கருத்தில் கொண்டு, வரி சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சீர்திருத்தங்கள், எளிதாக வணிகம் செய்வதற்கு உதவிடும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

நாட்டின் தற்போதைய வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் வகையில், எதிர்கால தலைமுறையினருக்கான சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

பல்வேறு அத்தியாவசிய பொருட்கள் மீதான வரி குறைக்கப்பட்டுள்ளதன் மூலம், சாதாரண குடும்பத்தினரின் செலவுகள் குறையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது பல்வேறு துறையினருக்கு நிவாரணத்தை அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில், சிறு வணிகர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டு, எளிதாக வணிகம் செய்ய வகை செய்யப்பட்டுள்ளதாக திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் வெளியிட்டுள்ள பதிவில், இந்த வரிக் குறைப்பு எதிர்வரும் பண்டிகைகளுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களுக்கு வழங்கியுள்ள பரிசு என்று தெரிவித்துள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், முன்னதாக சரக்கு மற்றும் சேவை வரி 4 விகிதங்களில் இருந்த நிலையில், தற்போது 5 மற்றும் 18 சதவீதம் என்று இரண்டு விகிதங்களாக குறைக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வி, வேளாண்மை, மருத்துவம், அடிப்படை தேவைகள் என்று அனைத்து வகையிலும் நாட்டு மக்களின் நலன் அறிந்து வரி சீர்திருத்தத்தை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடுவும், இந்த வரி சீர்திருத்தத்திற்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், ஏழை மக்களின் வளர்ச்சி சார்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முடிவு, விவசாயிகள் முதல் தொழில்துறையினர் வரை அனைத்து தரப்பினருக்கும் பயனளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரி கட்டமைப்பு, ஒவ்வொரு இந்தியரின் சிறந்த வாழ்க்கை தரத்தை உறுதி செய்யும் என்றும் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம் வரவேற்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

எனினும் இது 8 ஆண்டுகால தாமதமான நடவடிக்கை என்றும் திரு. ப. சிதம்பரம் குறிப்பிட்டுள்ளார்.

சரக்கு மற்றும் சேவை வரியை மாற்றியமைத்து, மருந்துப் பொருட்கள் மீதான வரியை குறைத்ததற்காக, மருந்து உற்பத்தி நிறுவனத்தினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள இந்திய மருந்து உற்பத்தி கூட்டமைப்பு தலைவர் திரு. சுதர்ஸன் ஜெயின், மருந்துகள் மீதான வரி 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதன் மூலம், மருந்துகளின் விலை குறையும் என்றும் இதனால் மக்கள் பயனடைவார்கள் என்றும் கூறியுள்ளார்.

உள்நாட்டு மருந்து உற்பத்திக்கு வலுசேர்த்து, உலகின் மருந்து உற்பத்தி மையமாக இந்தியாவை திகழச்செய்ய இது உதவிடும் என்றும் திரு. சுதர்ஸன் ஜெயின் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

புதுதில்லி வந்துள்ள ஜெர்மனி வெளியுறவு அமைச்சர் திரு. Johan Vathephul, பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விவாதித்தார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், வர்த்தகம், தொழில்நுட்பம், புதுமை கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது குறித்து ஜெர்மனி வெளியுறவு அமைச்சருடன் தாம் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

வேலைவாய்ப்பு குறித்து போலியாக வெளியிடப்படும் இணையதளங்கள் தொடர்பாக மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுபோன்ற இணையதளங்களுக்கு தனிப்பட்ட தகவல்களை பகிரவோ அல்லது பணத்தை அனுப்பவோ வேண்டாம் என்று அந்த அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

>>>>>>><<<<<<<

நாட்டின் வடமேற்கு பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட் மாநிலங்களில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலர் உயிரிழந்துள்ளதாகவும், பலர் காணாமல் போயுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹிமாச்சலப்பிரதேசத்தில் கனமழை காரணமாக அனைத்து கல்வி நிறுவனங்களுக்கு இரண்டு நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தில் கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக, நேற்று 9 பேர் உயரிழந்தனர், 15 பேர் காயமடைந்தனர்.

பாதிப்பு ஏற்பட்டுள்ள இடங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பஞ்சாப் மாநிலத்தில் பக்ரா, போங் ஆறுகள் மற்றும் ரஞ்சித்சாஹர் அணையிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டதால், குர்தாஸ்பூர், அம்ரிட்ஸர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஆயிரத்து 600க்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் மழை காரணமாக இதுவரை 37 பேர் உயிரிழந்துள்ளனர்.

>>>>>>><<<<<<<

காஸா நகரை கைப்பற்றுவதற்காக 40 ஆயிரம் ராணுவ வீரர்களை இஸ்ரேல் தயார் நிலையில் வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

அந்நாட்டின் உயர் ராணுவ அதிகாரிகளின் எதிர்ப்புகளுக்கு இடையே, இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே, இந்த தாக்குதல் இஸ்ரேல் பணயக் கைதிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும், ராணுவத்திற்கு பெரும்சேதம் ஏற்படும் என்றும் அந்நாட்டு ராணுவத் தளபதி திரு. Eyal Zamir எச்சரித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியின் சூப்பர்-4 சுற்றில் இந்தியா – கொரியா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

*பீகாரின் ராஜ்கிரில் நடைபெற்று வரும் இப்போட்டியில், கொரியா 2-1 என்ற கோல்கணக்கில் முன்னிலை வகித்திருந்த நிலையில், இந்திய வீரர் மன்தீப் சிங் கோல் அடித்து ஆட்டத்தை டிரா செய்தார்.*

*இந்தியா தமது அடுத்த போட்டியில் இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.*

*>>>>>>><<<<<<<*